DVC.NO.9/2023 Page No.
DATE:30.01.2026.
RW.1 .ARUL S/O SUNDRAMS

**<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

சத்தியபிரமாணம் தாக்கல் செய்த அனைத்து சங்கதிகளும் தெரியும். என்னுடன் 3 நபர்கள் உடன்பிறந்தவர்கள். முருகானந்தம் பெரிய அண்ணன். ஜெயவேல் இரண்டாவது அண்ணன். தங்கை ஜெகதீஸ்வரி. எனது தந்தை பெயர் சுந்தரம். அவர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தார். கடைசியாக எந்த காவல் நிலையத்தில் பணிபுரிந்தார் என்று எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் காவலர் என்று கூறினேன் என்றால் சீருடையில். காவல் ஆய்வாளராக எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தார் என்று எனக்கு தெரியாது. எனக்கும் மனுதாரக்கும் 2006 யில் திருமணம் நடந்ததது. எங்களுக்கு மகன் உள்ளார். மகன் பெயர் வெற்றிவேல். மகன் என்ன செய்கிறார் என்று எனக்கு தெரியாது. 3 வயதில் அவரை கூட்டு சென்றார்கள் 14 வருடம் ஆகி என்ன செய்கிறான் என்று தெரியாது. எந்த தேதி என்று ஞாபகம் இல்லை. அதன் பிறகு கோவிலும், காவல் நிலையத்திலும் சமரசம் செய்ய முயற்சி செய்தார்கள் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளவதாக சென்றார்கள். நிறம் மற்றும் வயது காரணம் கூறி பிடிக்கவில்லை என்று சொன்னார்கள். அந்த விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். எதிர் மனுதாரர் சென்ற பிறகு வாழ்வாதரத்திற்கு ஏதேனும் முயற்சி செய்தேன் என்றால் அவர்கள் சென்றார்கள் அதன் பிறகு தொடர்பு கொள்ளவில்லை. என் மகனின் படிப்பு செலவிற்காக நான் எந்தவித செலவும் செய்யவில்லை. எனது அப்பா எங்களுக்கு,அம்மாவுக்கும் இது போல் எந்த உதவியும் செய்யமால் இருந்தால் மனுஉளைச்சல் ஏற்படுத்தாது. எதிர் மனுதாரர் பியூட்டி பார்லர் வைத்து கைநிறைய வருமானம் ஈட்டி வருவதாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். காட்பாடியில் பியூட்டி பார்லர் நடத்தி வருவதாக கேள்விபட்டேன். எனது . உறவினர் மூலமாக கேள்விபட்டேன். எந்த வருடத்தில் நடத்தி வருகிறார் என்று எனக்கு தெரியாது. உறவினர் மூலமாக தெரிந்து கொண்டேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அதற்கான ஆவணங்கள் அல்லது சாட்சியங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிர் மனுதாரர் வேலூர் குடும்ப நல நீதி மன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் அழைப்பாணை வந்தது. அந்த வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்தினோம். சென்னை வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்தினோம். வழக்கறிஞர் பெயர் தெரியாது. ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய கடமை என்றால் உடன் இருக்கும் போது செய்யலாம். திருமணம் ஆனபோது எனக்கு சொந்த வீடு இருந்ததது. அது தாம்பரத்தில் இருந்ததது. தாம்பரம், சென்னை 45. தாம்பரத்தில் வீடு பிரிக்கபட்டது அதில் உள்ள ஒரு பாகம் எனக்கு பணமாக வந்தது என்றால் சரிதான்.எவ்வளவு பணம் வந்ததது என்று எனக்கு ஞாபகமில்லை. எந்த தேதியில் விற்கபட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புகார்தாரர் சான்று ஆவணம் 11 அந்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். அந்த விவரத்தை பிரமாண

வாக்குமூலத்தில் குறிபிடவில்லை. எதிர் மனுதாரருக்கும் அவர் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. எனக்கு போதுமான வசதி வாய்ப்பும் இருந்தும் ஜீவனாசம் கொடுக்கமால் அலைக்கழிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 30.01.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.